பக்கங்கள் 14+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 07 புதன்கிழமை 19.02.2025 | அதிர்வு 203

## இளைஞர் ஒருவர் வெட்டிக்கொலை!

### கொட்டாஞ்சேனையில் சம்பவம்

கொழும்பு, கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளூமெண்டல் ரயில் மார்க்கப் பகுதியில் இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதங்களால் 02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்







# தந்தை, மகன், மகள் என மூவர் சுட்டுப் படுகொலை

### காலியில் பயங்கரம் பொலிஸார் தீவிர விசாரணை

காலி, மித்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடேவத்த சந்திக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் தந்தை, மகன் மற்றும் மகள் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த தந்தை, மகன் மற்றும் மகள் மீது இனந்தெரியாத நபர்கள் சிலர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். 02 ▶




# புதுக்கடை நீதிமன்றத்தில் வைத்து 'கனேமுல்ல சஞ்சீவ' சுட்டுக்கொலை

### சட்டத்தரணி போன்று உடையணிந்து வந்திருந்த துப்பாக்கிதாரி

கொழும்பு, புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் இன்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பாதாள உலகக் கும்பலின் முக்கிய புள்ளியான ‘கனேமுல்ல சஞ்சீவ’ என்று அழைக்கப்படும் சஞ்சீவ குமார சமர ரத்ன உயிரிழந்துள்ளார்.

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் இலக்கம் 5 நீதிவான் நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் அவர் சாட்சியமளிக்க நிறுத்தப்பட்டிருந்தபோதே இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 02 ▶

### சட்டத்தரணி வேடத்தில் பெண் ஒருவரும் வந்தாரா?

‘கணேமுல்ல சஞ்சீவ’ சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் போது சட்டத்தரணி வேடத்தில் பெண் ஒருவரும் நீதிமன்றத்துக்குச் 02 ▶



# செல்பி எடுத்த ரஷ்ய நாட்டுப் பெண் பதுளை ரயிலில் இருந்து வீழ்ந்து பலி

(ராமு தனராஜா)

பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி இன்று புதன்கிழமை காலை பயணித்த ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து ரஷ்ய நாட்டுப் பிரஜையான பெர்மினோவா ஒல்கா என்ற 51 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளார்.

பதுளை ரயில் நிலையத்தில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் உள்ள அமுனுவெல்பிட்டிய பகுதியில் உள்ள சுரங்கப் பாதையைக் கடந்து ஓடும் ரயிலில் செல்பி எடுத்துக்கொண்டிருந்த மேற்படி பெண் தவறி கீழே வீழ்ந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் அதே ரயிலில் ஹாலிஎல ரயில் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பதுளை போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பதுளை போதனா வைத்திய சாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹலிஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இளைஞர் ஒருவர்...

வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 22 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் தனது மனைவியுடன் புளூமெண்டல் ரயில் மார்க்கத்துக்கு அருகில் வந்தபோது, சம்பவ இடத்தில் இருந்த மற்றொரு நபர் அவரை வேறொரு இடத்துக்கு அழைத்துள்ளார்.

இதன்போது, மோட்டார் சைக்கிள்களில் வந்த குழுவினர் கூரிய ஆயுதங்களால் மேற்படி நபரை வெட்டிப் படுகொலை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்என்று பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவத்துக்கான காரணம் மற்றும் கொலையாளிகள் தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கப் பெறாத நிலையில், கொட்டாஞ்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### தந்தை...

இந்தச் சம்பவத்தில் 39 வயதுடைய தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதன்போது படுகாயமடைந்த 6 வயதுடைய மகள் தங்காலை வைத்திய சாலையிலும், 9 வயது மகன் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர். எனினும், அவர்கள் இருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு ரி - 56 துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கும் பொலிஸார், சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான தீவிர விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

### புதுக்கடை...

சட்டத்தரணி போன்று உடையணிந்து வந்திருந்த ஆண் ஒருவர் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்காகப் பயன்படுத்தப்பட்ட ரிவோல்வர் ரகத் துப்பாக்கி நீதிமன்ற வளாகத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த 'கனேமுல்ல சஞ்சீவ', கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி நேபாளத்தின் காத்மாண்டுவில் இருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வந்தடைந்தபோது, 2023 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி 'கனேமுல்ல சஞ்சீவ' குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார்.

காலி பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர், வழக்கு ஒன்றில் ஆஜராவதற்காக இன்று காலை புதுக்கடை நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். அதன்போது சாட்சியமளிப்பதற்காக அவர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்தபோதே இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தையடுத்து புதுக்கடை நீதிமன்றக் கட்டடத் தொகுதி வளாகம் பலத்த பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் கடும் சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

### சட்டத்தரணி...

சென்றுள்ளார் என்று பொலிஸாரின் மேலதிக விசாரணைகளில் தெரிவந்துள்ளன.


கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் இன்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 'கனேமுல்ல சஞ்சீவ' உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்திருந்தது.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சட்டத்தரணி வேடத்தில் நீதிமன்றத்துக்குள் நுழைந்த ஆண் ஒருவரினால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சட்டத்தரணி வேடத்தில் பெண் ஒருவரும் நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளார் என்று பொலிஸாரின் மேலதிக விசாரணைகளில் தெரிவந்துள்ளன.

அதன்படி, துப்பாக்கிதாரி சட்டத்தரணி வேடத்தில் வெறும் கையில் நீதிமன்றத்துக்குள் முதலில் சென்றுள்ளார் என்றும், பின்னர் மேற்படி பெண் புத்தகத்தில் துப்பாக்கியை மறைத்து வைத்து சட்டத்தரணி வேடத்தில் நீதிமன்றத்துக்குச் சென்று துப்பாக்கிதாரியிடம் துப்பாக்கியைக் கொடுத்துள்ளார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்களை கைது செய்யப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சீன அமைச்சரின் வருகை

சீனாவின் இன விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் பௌ ஜு இன்று இலங்கை வந்து சேர்கிறார். அவரும் அவரது குழுவினரும் வரும் 23ஆம் திகதி வரை இலங்கையில் தங்கி இருக்கும் போது வடக்கிலும் சுற்றுப் பயணங்களை மேற்கொள்ள இருக்கிறார்கள் எனக் கூறப்படுகின்றது.

இலங்கை அரசின் இன விவகாரக் கையாளுகை தொடர்பாக இலங்கையோடு உறவாடி, கருத்துப் பரிமாறி, சில செயல் திட்டங்களை முன்னெடுக்கும் நோக்கத்தோடுதான் சீன நாட்டின் இன விவகார அமைச்சர் இலங்கைக்கு வருகை தருகிறார் எனக் கூறப்படுகிறது.

கொழும்பு - பெய்ஜிங் இரண்டுமே இன விவகாரத்தை கையாளுவதில் மட்டரகமான - மோசமான - கடந்த கால சாதனைகளைக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

இலங்கையில் தமிழர்களை அடக்கி, அடிமைப்படுத்தி, ஒடுக்கும் பௌத்த - சிங்களப் பேரினவாதம் இனக்கொடூர விவகாரத்தில் சர்வதேசப் புகழ்பெற்றது.

அதேபோன்ற சாதனையை வல்லரசு நாடான சீனாவும் ஈட்டி பிரபலம் பெற்றது. பல லட்சம் உய்குர் முஸ்லிம்களை அடக்கி, ஒடுக்கி, இம்சைப்படுத்தி வருவதில் சீனாவின் பெருமை உலகளாவியது. அதேபோன்று திபெத்திலும் தன்னுடைய கைவரிசையை சீனா காட்டி வருகிறது.

சிறுபான்மையினரை அடக்குவதிலும், இம்சைப்படுத்திக் கொடுமைப்படுத்துவதிலும், இனவழிப்புச் செய்வதிலும் சீன ஆட்சிப் பீடமும் இலங்கை அதிகார மையமும் ஒன்றுக்கு ஒன்று சளைத்தவை அல்ல.

இவ்விடயத்தில் அவற்றின் கொடுங்கோன்மைப் போக்கு அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள், மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற பல தரப்புகளினாலும் தொடர்ந்து காட்டமாக விமர்சிக்கப்பட்டு வருகிறது.

சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்குவதற்கு 'பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்துதல்' என்ற புதிய நாமத்தை சித்திரித்துத் தம் கைவரிசையை இந்த இரண்டு நாடுகளுமே நீண்ட காலமாக கட்டவிழ்த்து விட்டுள்ளன.

சிறுபான்மையினருக்கு எதிராகக் கொழும்பு ஆட்சி பீடம் கொடூரப் போரை முன்னெடுத்தபோது அது இன அழிப்பு நடவடிக்கை என்ற காரணத்தைக் காட்டி பல நாடுகள் இலங்கை அரசுத் தரப்புக்கு ஆயுதங்களை விநியோகிப்பதை தவிர்த்து வந்த போது, கொழும்புக்கு எப்போதும் ஆபத்பாந்தவனாக பக்கத்தில் நின்று இனவழிப்புக்கு உதவிய நாடு சீனாதான்.

இலங்கையில் யுத்தம் முடிந்த பின்னர் இங்கு அப்பாவி தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போது அவற்றுக்கு எதிராகக் கொழும்பைப் பாதுகாப்பதற்கு முழுமூச்சாக நின்ற நாடு சீனாதான்.

சிறுபான்மையினரை அடக்குவதில் கொழும்பும் பெய்ஜிங்கும் கூட்டுக் களவாணிகள் என்பது அப்பட்டமான உண்மை.

சீனாவில் இன அடக்கு முறையைக் கையாண்ட தரப்பாக இன விவகார அமைச்சு விளங்குகிறது. அதன் அமைச்சர் இப்போது இலங்கைக்கு வருகிறார். இலங்கை தன்னுடைய மோசமான இன அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்ட வடக்குக்கு அவர் விஜயம் செய்கிறார். இந்தப் பின்புலத்தில் அவரின் விஜயம் முக்கிய கவனிப்புக்கு உள்ளாகின்றது.

தேசிய ரீதியில் இனப் பிரச்சினையில் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழர்களைக் காபந்து பண்ணி, கையாள்வதில் பக்கத்து தேசமான இந்தியா தன்னுடைய பொறுப்பையும் கடப்பாட்டையும் துறந்து, கையாலாகாத தரப்பாக, அப்பட்டமாக வெறும் பார்வையாளராக நிற்கின்ற சூழலிலே, இனவழிப்பு விடயங்களில் சாதனை படைத்த சீன அமைச்சுக்குப் பொறுப்பானவரின் யாழ் வருகை புதிய பரிமாணங்களை ஏற்படுத்தக் கூடிய ஆபத்து இருப்பதாக பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

வடக்கில் சீன அமைச்சரின் வருகையோடு புதிதாகத் திறக்கப்படக்கூடிய வாசல்கள், தமிழ்த் தேசிய அழிவுக்கும் தமிழ் தேசத்தின் அடிமைப்படுத்தலுக்கும் வழி சமைக்க கூடுமோ என்ற அச்சம் பல தரப்பில் இருப்பதை மறுக்க முடியாது.

# அம்பாறை புத்தங்கல குப்பைமேடு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது!

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு மறுசுழற்சி நிலையத்தின் அருகில் குப்பை மலையாக காட்சியளித்த பிரதேசம் 'கிளீன் ஸ்ரீலங்கா' செயற்றிட்டத்தின் மூலம் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றது.

அம்பாறை பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள், அங்குள்ள புத்தங்கல வனப்பகுதியில் தொடர்ச்சியாக கொட்டப்பட்டதன் காரணமாக அந்தப் பகுதியில் குப்பை மலையொன்று உருவாகியிருந்தது.

இதற்கிடையே, குப்பை மலைக்கு யானைகள் உணவு தேடி வரத் தொடங்கியதன் காரணமாக அப்பிரதேசத்தின் ஊடான போக்குவரத்து பாதுகாப்பற்றதாக மாறியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (16) ஆரம்பமான இந்தச் சிரமதானம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த 2024 ஆம் ஆண்டின் ஜூன் மாதத்தில் அம்பாறையில் நடைபெற்ற பொசோன் வலயத்தைப் பார்வையிடச் சென்ற 65 வயதான முதியவர் ஒருவரும், இன்னொரு பொலிஸ் உத்தியோகத்தரும் புத்தங்கல பிரதேசத்தில் வைத்து காட்டு யானைத் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தனர்.

தாக்குதலுக்கு இலக்கான முதியவர் உயிரிழந்த நிலையில், பொலிஸ் உத்தியோகத்தர் நீண்ட நாள் சிகிச்சையின் பின் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பியிருந்தார்.

அது போன்ற பல்வேறு சந்தர்ப்பங்கள் அதற்கு முன்னரும் இடம்பெற்றிருந்தன. அதேபோன்று, இரசாயனக் கலவைகள் கொண்ட குப்பைகளை உணவாக உட்கொண்டதன் காரணமாக கடந்த 2024 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் புத்தங்கல குப்பை மலையில் யானை ஒன்று உயிரிழந்திருந்தது.



இந்த நிலையில் இந்தக் குப்பை மலை சுத்தப்படுத்தப்பட்டு அங்கு கொட்டப்பட்டிருந்த குப்பைகளும் அகற்றப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில் கொட்டப்படும் குப்பைகளை தினந்தோறும் உண்பதற்கு 10 இற்கும் மேற்பட்ட யானைகள் வருகை தருவதுடன் அருகில் உள்ள பொது மக்களின் உடமைகளுக்கும் சேதம் விளைவித்திருந்தன. அம்பாறை நகரப்பகுதி உள்ளிட்ட ஏனைய புற நகர பிரதேசங்களில் இருந்தும் இந்தப் பகுதிக்குக் குப்பைகள் மாநகர மற்றும் பிரதேச சபையின் வாகனங்கள் மூலம் கொண்டு வரப்பட்டு கடந்த காலங்களில் கொட்டப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனால் அம்பாறை நகரில் இருந்து குப்பைகள் வாகனங்கள் மூலம் தினமும் கொண்டுவரப்பட்டு கொட்டப்பட்டன.

இந்த நிலையில் தற்போது புத்தங்கல குப்பை மலை அகற்றப்பட்டமை தொடர்பில் அம்பாறை பிரதேச சிவில் சமூக அமைப்புகள் பலவும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளன.







# சம்மாந்துறையில் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சம்மாந்துறை பிரதேச சபையின் கீழுள்ள நூலகங்களின் ஒத்துழைப்புடன் அமீர் அலி பொது நூலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே" எனும் தொனிப்பொருளில் 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதத்தின் பரிசளிப்பு விழா நேற்று செவ்வாய்க்கிழமை (18) பிரதேச சபையில் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அத்துடன் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.பஸ்மிலா, வரிப்பத்தான்சேனை பொது நூலகத்தின் நூலகர் ஏ.கே.ஜெஃபர், அக்கரைப்பற்று மாநகர சபை பொது நூலகத்தின் நூலகர் ஐ.எல்.எம் ஹனீபா ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டனர். பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், நூலகர்கள் மற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் வாசகர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அதிதிகளால் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அத்துடன் சிறந்த வாசகர்களும் விசேடமாகக் கௌரவிக்கப்பட்டனர். இங்கு மாணவர்கள் மற்றும் வாசகர்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் அரங் கேற்றப்பட்டன.





# விவேகானந்த பூங்காவில் வணக்க நிகழ்வு!

(வி.ரி. சகாதேவராஜா)

உலகெலாம் ஜீவசேவை ஆற்றிவரும் இராமகிருஷ்ண மிஷனை ஸ்தாபித்த சுவாமி விவேகானந்தரின் பெயரால் இலங்கையில் முதன் முதலாக மட்டக்களப்பு கிரான் குளத்தில் அமைக்கப்பட்ட விவேகானந்த பூங்காவுக்கு, உலகளாவிய ராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடங்களின் துணைத்தலைவர் அதிவணக்கத்துக்கு உரிய ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்தஜி மஹராஜ் நேற்று முன்தினம் விஜயம் செய்தார்.

அவருடன் பத்து சுவாமிஜிக்கள் விவேகானந்த பூங்காவுக்கு விஜயம் செய்து அங்குள்ள சுவாமிகள் சிலைகள் பிரார்த்தனை மண்டபம் பூங்கா போன்றவற்றை பார்வையிட்டனர்.

இந்த மாபெரும் செயற்றிட்டத்தை முன்னெடுத்த விவேகானந்த பூங்கா ஸ்தாபகர் பிரபல சமூக செயற்பாட்டாளர் கந்தப்பன் சற்குணேஸ்வரனையும் அங்கு சமூகமளித்திருந்த அவரது சகோதரர் கந்தப்பன் பிரதீஸ்வரன் உள்ளிட்ட குழாத்தினரை சுவாமிகள் பாராட்டினர்.

சமூக நலன்புரி ஒன்றியம், விவேகானந்த தொழில்நுட்ப கல்லூரி, முல்லைத்தீவு அன்னை சாரதா இல்லம், மட்டக்களப்பு திலகவதியார் மகளிர் இல்லம் போன்ற பல சமூக நோக்குடைய அமைப்புக்களை உருவாக்கி ஜீவ சேவையாற்றி வரும் க.சற்குணேஸ்வரன் அண்மையில் கிரான் குளம் விவேகானந்த பூங்காவை பிரமாண்டமான முறையில் ஸ்தாபித்தமை குறிப்பிடத்தக்கது.

குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998







# உளவளத்துணைப் பாட நெறியை நிறைவு செய்தோருக்குப் பட்டமளிப்பு

(றிபாஸ்)

ஹாட்வர்க் அகடமியின் ஐந்தாவது பட்டமளிப்பு விழா கொழும்பு சி.ஐ. டி.ஏ கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி றூமி அமித் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதி சபாநாயகர் டாக்டர் ரிஸ்வி சாலிஹ் பிரதம அதிதியாகவும் ஜே.ஜே பவூண்டேஷனின் ஸ்தாபகர் ஐ. வை.எம்.ஹனீப் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

தொழில் வான்மை உளவளத்துணை பாடநெறியை நிறைவு செய்த பல மாணவர்களுக்கு அதிகளால் பட்டம் வழங்கி வைக்கப்பட்டது.







# விநாயகபுரத்தில் திறன் வகுப்பறை!

(வி.ரி.சகாதேவராஜா)

மட்டு. அம்பாறை விஞ்ஞான ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 3 ஆவது திறன் வகுப்பறைத் திறப்பு விழா நேற்று (18) செவ்வாய்க்கிழமை திருக்கோவில் விநாயகபுரம் மகா வித்தியாலயத்தில் அதிபர் எஸ்.ஜெயகாந் தலைமையில் இடம்பெற்றது.

கிராமப் புற மாணவர்கள் தொழில் நுட்ப சாதனங்கள் ஊடாகக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் விஞ்ஞான ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தத் திறன் வகுப்பறைக்கான நிதியுதவி அமரர் திருமதி மகேஸ்வரி அம்பாள் குமாரசுவாமி நினைவாக அவரது குடும்பத்தால் (அமெரிக்கா) மனித நேயம் அமைப்பின் ஒருங்கிணைப்பில் விஞ்ஞான ஒன்றிய அமைப்பின் நெறிப்படுத்தலில் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா. உதயகுமார் , கௌரவ அதிதிகளாக மனித நேயம் அமைப்பின் தலைவர் திருமதி கயிலாசப்பிள்ளை அம்மையார், மனித நேயம் அமைப்பின் அமெரிக்காவுக்கான பொறுப்பாளர் தனகே.அரவிந்தன், விஞ்ஞான ஒன்றியம் மட்டு அம்பாறை அமைப்பின் ஸ்தாபகர் மற்றும் இணைப்பாளர் வ.யதுர்ஷன், உப தலைவர் ம.திலக்சன், பாடசாலைக்கான இணைப்பாளர், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர், விநாயகபுரம் சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு, பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.







# உடப்பு பொலிஸ் பிரிவில் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(க.மகாதேவன்)

உடப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பள்ளிவாசல் பாடு பகுதியில் கரைவலை வேலையில் உழவு இயந்திரம் இயக்கிக் கொண்டிருந்த நபர் ஒருவர் விபத்துக்குள்ளாகியதில் உயிரிழந்துள்ளார் என்று உடப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின் போது, சூரிய ஆராச்சிகே அஜித் நிலந்த (வயது-36) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையாவர் மரணமடைந்துள்ளார்.

கரைவலை தொழில் இடம்பெற்ற போது, இயந்திரப் படகு ஒன்றைக் கடலிலிருந்து கரைக்கு கயிறு மூலம் உழவு இயந்திரத்தால் இழுத்த வேளை உழவு இயந்திரம் ஒரு பகுதி சரிந்துள்ளது.

இந்தவேளை இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று உடப்பு பொலிஸார் தெரிவித்தனர். இதில் மற்றுமொருவர் காயம் ஏற்பட்ட நிலையில் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் விசாரணை முடிவடைந்து அவரின் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உழவு இயந்திரம் விசாரணைக்காக உடப்பு பொலிஸாரால் தடுத்து கைப்பற்றப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை உடப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(நிப்ராஸ்)

அமைப்பால் பத்து லட்சம் மரநடுகைத் திட்டத்தின் கீழ் பாலமுனை கடற்கரை பூங்காவில் மரநடுகை செய்யப்பட்டது.



# பாகிஸ்தான் தூதுவரைச் சந்தித்தனர் முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள்

(எஸ். சினீஸ்கான்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் அழைப்புக்கமைய, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் இளைப்பாறிய மேஜர் ஜெனரல் பஹீம் உல் அஸீஸ் மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று (18) நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்றது.

இதன்போது, லாஹூர் பிராந்திய கொன்ஸல் ஜெனரல் யாஸின் ஜோயிஆ தலைமையில் தற்போது இலங்கை வந்துள்ள வர்த்தகத் தூதுக் குழுவினர் வருகை தந்து, வர்த்தகத் துறையில் இங்கு முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடினர்.

குறிப்பாகத் தகவல் தொழில் நுட்பம் மற்றும் உல்லாசப் பயணத்துறை தொழிலாண்மை என்பவற்றை மையப்படுத்தியதாக நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப் பினர்களான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் மற்றும் எம்.எஸ். உதுமாலெப்பை ஆகியோர் பங்கேற் றனர்.



# முல்லைத்தீவு சுகாதாரத்துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யுங்கள்

## ரவிகரன் எம்.பி. கோரிக்கை

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் காணப்படும் பல வைத்தியசாலைலிலுமுள்ள குறைபாடுகள் தொடர்பிலும், தேவைப்பாடுகள் தொடர்பிலும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நாடாளுமன்றில் முன்வைப்புக்களைச் செய்துள்ளார். குறித்த தேவைப்பாடுகளை உடனடியாக நிறைவேற்றித் தருமாறும் கேட்டுக் கொண்டார்.

குறிப்பாக மருந்துக் கலவையாளர்களின் ஆளணிப்பற்றாக்குறை, வைத்தியாசாலைகளில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறைகளைப் பூர்த்திசெய்தல், புதுக்குடியிருப்பு ஆதார வைத்திய சாலையில் நிலவும் வைத்திய நிபுணர், ஆய்வு கூடத் தொழில்நுட்பவியலாளர் மற்றும் எக்ஸ்ரே கதிர் படப்பிடிப்பாளர்களின் தேவைப்பாடுகள், மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் காணப்படும் வைத்திய நிபுணர் மற்றும், துணை மருத்துவப் பணியாளர் தேவைப்பாடுகள், அளம்பில் பிரதேச வைத்திய சாலைக்கான நோயாளர் காவு வண்டி தேவைப்பாடுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தனது முன்வைப்புக்களைச் செய்துள்ளார்.

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் முன்வைக்கப்பட்ட தேவைப்பாடுகளே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று (18) இடம்பெற்ற வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டு விவாதத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவில் காணப்படும் மருந்துக் கலவையாளர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

மருந்துக் கலவையாளர்கள் சுகாதார சேவையில் முக்கிய இடம் வகிக்கின்றார்கள். மருந்து வழங்கல், சத்திர சிகிச்சைப் பொருள்கள், மருத்துவப் பொருள்கள் என்பவற்றின் பொருள் பதிவேட்டைப் பேணல், மருந்துக் கையிருப்பைப் பேணல், மருந்துக் களஞ்சியத்தைப் பேணல் என்பன அவர்களின் முக்கிய பணியாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மருந்துக் கலவையாளர் ஆளணி 34 ஆகும். ஆயினும் தற்போது உள்ள மருந்துக் கலவையாளர்களின் எண்ணிக்கை 13 மட்டுமே ஆகும்.

ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக மருந்துக் கலவையாளர்களுக்கான ஆட்சேர்ப்பு பயிற்சி நெறிகள் சுகாதார அமைச்சால் மேற்கொள்ளப்படவில்லை.



எமது சில மருத்துவமனைகளின் மருந்துக் கலவையாளர்களின் பணியானது மருத்துவ அதிகாரியின் மேற்பார்வையில் வேறு ஊழியர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இந்த நிலையானது நோயாளர் பாதுகாப்பு மற்றும் தரம் என்பவற்றில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

எனவே மருந்துக் கலவையாளர் பயிற்சி நெறியை விரைவாக ஆரம்பித்து ஓர் அணியினரைப் பயிற்றுவித்து வெற்றிடங்களை நிரப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு மருந்துக் கலவையாளர் வெற்றிடங்களுக்கு மருந்தாளர் கொண்டு நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

வைத்தியசாலைகளின் ஆளணி மீளாய்வு செய்யப்பட்டு வைத்தியசாலைகளில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறைகள் நிரப்பப்படவேண்டிய தேவைகளும் காணப்படுகின்றன.

காலத்துக்குக் காலம் தேவைகளுக்கும் புறநிலை மாற்றங்களுக்கும் அமைவாக சுகாதார சேவையின் ஆளணியினர் விரிவாக்கப்படல் வேண்டும்.

தீர்க்கமான ஓர் ஆளணி விரிவாக்கமானது இறுதியாக 2013 ஆம் ஆண்டு நடைபெற்றது.

கடைசியாக நடைபெற்ற அவ் ஆளணி விரிவாக்கத்தில் கூட தரமுயர்த்தப்பட்ட ஆதார வைத்தியசாலைகள் மற்றும் பிரதேச வைத்தியசாலைகள் என்பவற்றின் ஆளணியினர் அதற்கேற்றவகையில்விரிவாக்கப்படவில்லை. குறிப்பாகத் தரமுயர்த்தப்பட்ட ஆதார மருத்துவமனைகள் இன்னமும் பிரதேச மருத்துவமனைகளின் ஆளணியினருடனேயே இயங்குகின்றது. எனவே தரமுயர்த்தப்பட்ட ஆதார வைத்திய சாலை மட்டத்துக்கான சேவைகளை வழங்க ஆளணிகளை பூர்த்தி செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இந்தக் குறைபாடு காரணமாக மருத்துவ நிர்வாகத்துக்கும் பொது மக்களுக்குமான முரண் நிலைகள் உருவாகுவதுடன் நோயாளர் பராமரிப்பு சேவை வழங்கலும் பாதிப்படைகின்றது.

ஆளணி விரிவாக்கத்துக்கான தொடக்க முயற்சிகள் தற்போது மேற்கொள்ள ஆரம்பித்துள்ளன.

எனவே ஆளணி விரிவாக்க நடவடிக்கைகளை விரைவாக முழுமைப்படுத்துவதுடன் விரிவாக்கப்பட்ட ஆளணிக்கு உரிய பணியமர்த்தல்களை விரைவாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஆளணி விரிவாக்கத்தின் போது, அதற்கான நியமங்களை வடிவமைக்கும் போது, மருத்துவமனைகளின் புவியியல் நிலைகள் மற்றும் உள்ளக அமைவுகள் என்பனவற்றையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

அதேவேளை, புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் வைத்திய நிபுணர், ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் மற்றும் எக்ரே படப்பிடிப்பாளர்களின் தேவைப்பாடுகள் காணப்படுகின்றன.

புதுக்குடியிருப்பு ஆதார வைத்திய சாலையானது கேந்திர முக்கியத்துவமான இடத்தில் அமைந்துள்ளது. இந்த மாவட்டத்தின் மூன்றில் ஒரு பங்கு சனத்தொகைக்கான சேவைகளை வழங்கி வருகின்றது.

ஆயினும் இந்த மருத்துவமனையில் மருத்துவ நிபுணர்களின் சேவைகள் மற்றும் முக்கிய துணை மருத்துவப் பணிகளான மருத்துவ ஆய்வு கூடத் தொழிநுட்பவியலாளர் மற்றும் எக்ரே படப்பிடிப்பாளர் ஆகியோர் இல்லாத நிலையே உள்ளது.

எனவே பொது வைத்திய நிபுணர் ஒருவரை விரைவாக நியமிக்க நடவடிக்கை எடுப்பதுடன், மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர், எக்ரே படப்பிடிப்பாளர் ஆகியோரை விரைவாக நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றேன்.

இந்த நிலையில் மாங்குளம் ஆதார

தொடர்ச்சி▼

# முல்லைத்தீவு...

தொடர்ச்சி▲

வைத்தியசாலையில் வைத்திய நிபுணர் மற்றும், துணை மருத்துவப் பணியாளர் தேவைப்பாடுகள் காணப்படுகின்றன.

மாங்குளம் ஆதார மருத்துவமனை யானது ஓர் 'ஏ' தரத்திலான ஆதார மருத்துவமனையாகும். மாகாணத்துக் குரிய புனர்வாழ்வு மருத்துவ அலகையும் இது கொண்டுள்ளது.

ஏ- 9 நெடுஞ்சாலையில் கேந்திர முக்கியமான இடத்தில் இது அமைந் துள்ளதால் இந்த மருத்துவமனை முக்கியத்துவம் பெறுகின்றது. அண் மைய நெதர்லாந்து அரசின் செயற் றிட்டத்தின் மூலம் இதன் சேவைப் பரப்பு இன்னும் கணிசமாக விரிவடைந்து நோயாளர் சேவை இடம்பெறுகின்றது.

ஓர் 'ஏ' தரத்திலான ஆதார மருத்து வமனையாக இருப்பதால், அனைத்து முக்கிய மருத்துவ நிபுணத்துவ சேவைப்பிரிவுகளும், துணை மருத்தவ சேவைகளும் இங்கு அமைதல் வேண் டும்.

ஆனால் இந்த ஆதார மருத்துவ மனையானது மகப்பேற்று மருத்துவர், குழந்தைகள் சிகிச்சை நிபுணர், மூட்டு வாத சிகிச்சை நிபுணர் மற்றும் முக்கிய துணை மருத்துவப் பணிகளான இயன்மருத்துவ சிகிச்சையாளர், மற்றும் எக்ரே படப்பிடிப்பாளர் சேவை என்பன இல்லாத நிலையிலேயே தற்போது இயங்கி வருகின்றது.

எனவே மகப்பேற்று மருத்துவர், குழந்தைகள் சிகிச்சை நிபுணர், மூட்டு வாத சிகிச்சை நிபுணர் ஆகியோரின் நியமனத்தை விரைவாக மேற்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அத்தோடு முக்கிய துணை மருத்து வப் பணிகளான இயன் மருத்துவ சிகிச்சையாளர், எக்ரே படப்பிடிப்பாளர் ஆகியோரின் நியமனத்துக்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள் கின்றேன்.

மேலும் அளம்பில் பிரதேச வைத்திய சாலைக்கான நோயாளர் காவு வண்டி மற்றும் மணலாறு சுகாதார வைத்திய அதிகாரிக்கான வாகன தேவைப்பாடு ளும் காணப்படுகின்றன.

அளம்பில் பிரதேச மருத்துவமனை ஒரு நோயாளர் காவு வண்டி இல்லாம லேயே இயங்கி வருகின்றது. இது முல்லைத்தீவில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது.

இந்த மருத்துவமனைக்கான நோயா ளர் காவு வண்டி சேவைகள் இதர மருத்துவமனைகளான கொக்கிளாய் பிரதேச மருத்துவமனை (22கி.மீ.), சம்பத்துநுவர பிரதேச மருத்துவமனை (35 கி.மீ.) மூலமாகவே மேற்கொள்ளப் படுகின்றது.

அளம்பில் மற்றும் மணலாறு ஆகிய இரண்டு சேவை இடங்களும் மிகக் குறைவான பொதுப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இடங்களாகும்.

ஆகவே அளம்பில் பிரதேச மருத்து வமனைக்கு உரிய நோயாளர் காவு வண்டி ஒன்றை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள் கின்றேன். – என்றார்.

# கிழக்கைக் கட்டியெழுப்ப நடவழக்கை எடுங்கள்!

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. கோரிக்கை

(எஸ். சினீஸ்கான்)

கிழக்கு மாகாணம் முற்று முழுதாக புறக்கணிக்கப்பட்டுள்ளது என்றும் கிழக்கு மாகாணத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ ின் பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை (18) நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த வரவு செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணம் முற்று முழுதாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை நான் இங்கு சொல்லி வைக்கவேண்டும்.

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கென்று எந்தவொரு விஷேட நிதியும் ஒதுக்கப்படவில்லை. வடக்கு மாகாணத்துக்குப் பாரியளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனை வரவேற்கிறோம் பாராட்டி நன்றி தெரிவிக்கிறோம். அதேபோல் கிழக்கு மாகாணம் யுத்தத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பிரதேசமாகவும் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் பிரதேசமாகவும் காணப்படுகிறது.

இருந்தபோதிலும் கிழக்கு மாகாண



சபைக்கு கூட போதியளவு நிதி அரசால் கிடைப்பதில்லை. இந்த மாகாணம் இயற்கை, செயற்கை அனர்த்தங்களால் தொடர்ச்சியாக பாதிக்கப்படும் பிரதேசமாக இருக்கிறது. அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாலங்கள், பாடசாலைகளை புனரமைப்பதற்கு தேவையான எந்தவொரு ஒதுக்கீடும் இதுவரை செய்யப்படவில்லை.

எனவே இந்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படாவிட்டாலும் அரசால் ஒதுக்கீடு செய்ய முடியும். ஆகவே கிழக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கான நிதிகளை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அரசிடம் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், தென்கிழக்கு பல் கலைக்கழகம் பல்வேறு தேவைகளோடு காணப்படுகிறது. போதுமான கட்ட டங்கள் இல்லை, ஒவ்வொரு வருடமும் வெள்ளம் வரும் போது நீர் நிறைந்து மூடவேண்டிய நிலை காணப்படுகிறது. பல்கலைக்கழகத்துக்குள் நுழைய முடியாதளவு வெள்ளம் நிறைந்து காணப்பட்டது. இப்பிரச்சினையை தீர்ப்பதற்கும் பல்கலைக்கழகத்தை வெள்ள அனர்த்தத்தில் இருந்து நிரந்தரமாக பாதுகாப்பதற்கு தேவை யான நிதியை ஒதுக்கீடு செய்வதுடன் ஒலுவில் துறைமுகத்தை பயனுள் ளதாக்கும் வகையில் மாற்றுவதற்கு தேவையான வசதிகளை செய்து கட்டியெழுப்பவேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

அதேபோல், கிழக்கு மாகாணமானது மீன்பிடி துறையில் முன்னேற்றமடைய வேண்டிய மாகாணமாக இருந்த போதிலும் வாழைச்சேனை துறைமு கத்தில் எந்தவொரு வசதியும் இல்லாமல் உள்ளது. அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வாழைச்சேனை கடதாசி ஆலையை மீண்டும் முழுமையாக இயக்க முடியு மாக இருந்தால் பல வேலை வாய்ப்புக் களை உருவாக்க முடியும்.– என்றார்.



# மரநடுகை திட்டத்தில் ஈடுபட்ட நாம் இலங்கையர் அமைப்பு

(றிபாஸ்)

“நாம் இலங்கையர்கள்” எனும் அமைப்பால் பத்து லட்சம் மரநடுகைத் திட்டத்தின் கீழ் பாலமுனை கடற்கரை பூங்காவில் மரநடுகை செய்யப்பட்டது.

அமைப்பின் தலைவர் எஸ்.எல். ற/ஹமத்துல்லாஹ் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் சமூர்த்தி உத்தியோகத்தர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், அமைப்பின் அங்கத் தவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு மர நடுகையில் ஈடுபட்டனர்.

# அகில இலங்கை ஐக்கிய மக்கள் கட்சியினது ஏழாவது மாநாடு!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அகில இலங்கை ஐக்கிய மக்கள் கட்சியினது ஏழாவது மாநாடும் தேசிய சமாதான நீதிபதிகள் சபையின் அங்குரார்ப்பண நிகழ்வும், கட்டமைப் பும், எதிர்காலத் திட்டமிடலும், எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிந்தவூர் அட்டப்பள்ளம் ரிலாக்ஸ் கார்டன் என்னும் இடத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு அகில இலங்கை சமாதான நீதிபதிகள் சபையினுடைய ஸ்தாபகத் தலைவரும் சமூக செயற் பாட்டாளரும், அகில இலங்கை சமாதான நீதிவானுமான ஏ.எல். அன் ஸாரின் வழிகாட்டலில், தலைமையில் இடம்பெறும்.

இதற்கு கல்முனை காதி நீதிவானும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான பழீல் அன்ஸார் மௌலானா, சிரேஷ்ட சட்டத் தரணியும் பதில் நீதிபதியுமான நஸீர், சட்டத்தரணிகளான ரொஷான், அஸாம் உட்பட கல்விமான்கள், நாட்டில் பல பாகங்களில் இருந்து அநேகமான சமாதான நீதிவான்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

எதிர்காலத்தில் சமாதான நீதிவான் களுக்கு அரசு மூலம் பல சலுகைகளை, கௌரவங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கமாகவும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினம் சமாதான நீதி வான்களுக்கான தலைமைத்துவம் மற்றும் ஊடகம், சமாதான நீதிவான் களுடைய கடமை தொடர்பாக செயல மர்வும் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும் அனைத்து சமாதான நீதிவான்களுக் கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள் ளன.

எதிர்காலத்தில் நாட்டின் நாலா பாகங் களிலும் இருந்து தேசிய சமாதான நீதி வான் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் 100 சமாதான நீதிபதிகளு டைய அறிமுகம் தாங்கி வரும் நூல் முதற்கட்டமாக நோன்புப் பெருநாளின் பின்னர் மிக பிரம்மாண்டமான முறை யில் வெளியீடு செய்யப்படவுள்ளது.

தேசிய சமாதான சபையில் இருக்கும் அனைத்து சமாதான நீதிபதிகளும் “சமாதானத்துக்காக உழைக்கும் கரங்கள்” என்னும் மகுடத்தின் கீழ் அவர்களுக்கு விருதுகள் வழங்கப் படவுள்ளன.

அதேவேளை, அன்றைய தினம் நிந்தவூர், அட்டப்பள்ளம் ரிலாக்ஸ் கார்டனில் மதியம் 2 மணி முதல் 5 மணிவரை அகில இலங்கை ஐக்கிய மக்கள் கட்சியினுடைய ஏழாவது மாநாடும் இடம் பெறவுள்ளது.




# கிழக்கு மாகாண கைப்பணியாளருக்கு விருது!

(அபு அலா )

2024 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் சாதனை படைத்த கைப்பணியாளர்களுக்கான மாபெரும் விருது வழங்கும் விழா திருகோணமலை உப்புவெளி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண கிராமியத் தொழிற்துறைத் திணைக்கள மாகாண பணிப்பாளர் நா.மணிவண்ணன் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் பைஷல் ஆப்தீன் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக மாகாண சபை செயலக செயலாளர், மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தேசிய மற்றும் மாகாண மட்ட சில்ப அபிமானி தேசிய அருங்கலைகள் மற்றும் தேசிய கைத்தறிப் புடைவைத் தயாரிப்புப் போட்டி மற்றும் நெசவு வாரம் ஆகிய போட்டிகளில் பங்குபற்றி, வெற்றிபெற்ற சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற 12 உற்பத்தியாளர்களுக்கும், மாகாண மட்டத்தில் சாதனை படைத்த 170 உற்பத்தியாளர்களுக்கும் இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# திருப்பரங்குன்றம் மலைக்கு செல்ல எல்.முருகனுக்கு அனுமதி மறுப்பு

## டி.ஜி.பிக்கு அண்ணாமலை கடிதம்



திருப்பரங்குன்றத்தில் மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டது அதிகார துஷ்பிரயோகம் என தமிழக டிஜிபிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் கடந்த 17 ஆம் திகதி திருப்பரங்குன்றத்தில் உள்ள சுப்பிரமணியர் கோயில் மற்றும் காசி விஸ்வநாதர் கோயில்களுக்குச் செல்ல முயன்ற போது பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டார். இதற்கு எல். முருகன் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து, அவர் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை, தமிழக டி.ஜி.பிக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

“கடந்த 17 ஆம் திகதி மதுரை மாவட்டத்தில் உள்ள திருப்பரங்குன்றம் கோயிலுக்கு வருகை தந்த மத்திய அமைச்சர் எல்.முருகனை, கோயிலுக்குச் செல்வதை தடுக்கும் முயற்சியில், பாதுகாப்புப் பணியில் இருந்த தமிழக பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதன்மூலம், அவர்கள் இந்த விவகாரத்தை தவறாகக் கையாண்டதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திருப்பரங்குன்றம் மலையில் உள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் மற்றும் அருள்மிகு காசி விஸ்வநாதர் கோயிலுக்கு வருகை தருவது உட்பட, அமைச்சரின் பயணத் திட்டம் தொடர்பாக தமிழக பொலிஸின் முன்அனுமதி பெற்றிருந்த போதிலும், கோயிலின் நுழைவாயிலில் நிறுத்தப்பட்டிருந்த பொலிஸால் அமைச்சர் தடுக்கப்பட்டமை வருத்தமளிக்கிறது.

மேலே குறிப்பிடப்பட்ட கோயில்களுக்குச் செல்வதற்கு உடனடியாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து அமைச்சர், அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியபோது, கோயிலுக்குச் செல்ல அனுமதிக்கக் கூடாது என்று உயர் அதிகாரிகளிடம் இருந்து உத்தரவு வந்ததாக அதிகாரிகள் பதிலளித்துள்ளனர் என்பது கூடுதல் வருத்தத்தை அளிக்கிறது.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில், அவர் விரும்பும் இடத்தில் வழிபடும் உரிமையை பறிப்பதன் மூலம் பொலிஸார் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளனர். முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு சமீப காலமாக தமிழ்நாட்டில் பொதுமக்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகி உள்ள சூழலில், இந்தச் சம்பவம் பொதுமக்களிடையே கடுமையான சந்தேகத்தை எழுப்புகிறது.

நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் உள்ள ஒருவரே இப்படி அவமானப்படுத்தப்பட்டால், நமது மாநிலத்தில் சாதாரண மக்களின் நிலை என்ன?.” என்று கேள்வி எழுப்பி உள்ளார்.

# டில்லியின் புதிய முதல்வர் யார்? பா.ஜ.கவினர் இன்று ஆலோசனை



டில்லி பேரவைத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு 11 நாள்கள் கடந்து, 27 ஆண்டுகளுக்கு பின்பு தலைநகரில் ஆட்சியை கைப்பற்றிய நிலையில் புதிய முதல்வரை முடிவு செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட பா.ஜ.க. எம்எல்ஏக்கள் இன்று இரவு 7 மணிக்கு கூட இருக்கிறார்கள்.

டில்லியின் அடுத்த முதல்வர் நாளை வியாழக்கிழமை ராம்லீலா மைதானத்தில் நடைபெற இருக்கும் நிகழ்ச்சியில் பதவி ஏற்க இருக்கிறார். அதற்கான ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. முதல்வர் யார் என்றே அறிவிக்காமல் விழா ஏற்பாடுகள் நடைபெறுவதை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

இந்நிலையில் அடுத்த முதல்வர் யார் என்பது குறித்து பா.ஜ.கவினர் இன்னும் மௌனம் காத்து வருகின்றனர். முன்னாள் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலை தோற்கடித்த பா.ஜ.கவின் பர்வேஷ் வர்மா, ரேகா குப்தா, விஜயேந்தர் குப்தா, சதீஸ் உபாத்யாய்,. ஆஷிஸ் சூட், பவன் ஷர்மா மற்றும் அஜய் மஹாவர் ஆகியோர் முதல்வர் பதவிக்கான போட்டியில் உள்ளனர்.

இதுகுறித்து பா.ஜ.க வட்டாரங்கள் கூறுகையில்,

“பா.ஜ.க. கட்சி அலுவலகத்தில் எம்.எல்.ஏக்கள் கூடியதும், கூட்டம் தொடங்கும். எம்.எல்.ஏகள் மாலை 6.30 மணி முதல் 7 மணிக்குள் அங்கு கூடுவார்கள். மத்திய தலைமையின் சார்பில் மூத்த தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்பார்கள். கூட்டம் முடிந்த பின்பு புதிய முதல்வரின் பெயர் அறிவிக்கப்படும்.

டில்லியின் முதல்வரை குடியரசுத் தலைவரே நியமிக்கிறார். பா.ஜ.க. எம்.எல்.ஏக்கள் தேர்வு செய்யும் முதல்வரின் பெயரை துணைநிலை ஆளுநர் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைப்பார். அவரின் ஒப்புதலுக்கு பின்பு, துணைநிலை ஆளுநர் புதிய முதல்வர் மற்றும் அமைச்சர்களுக்கு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பும் செய்து வைப்பார்.” என்று தெரிவித்தனர்.

# போப் பிரான்சிஸின் இரு நுரையீரலிலும் நிமோனியா: வத்திக்கான் புதிய தகவல்

போப் பிரான்சிஸின் நுரையீரல் இரண்டிலும் நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவரது உடல்நிலை மிகவும் சிக்கலானதாக இருப்பதாகவும் வத்திக்கான் தெரிவித்துள்ளது.

88 வயதான அவர் ஒரு வாரத்திற்கும் மேலாக சுவாச தொற்று நோயால் பாதிக்கப்பட்டு ரோம் ஜெமெல்லி மருத்துவமனையில் கடந்த வெள்ளிக் கிழமை அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில், திங்கள் கிழமை பிற்பகல் மருத்துவமனையில் புதனித பாப்பரசருக்கு மேற்கொள்ளப்பட்ட சிடி ஸ்கேன் பரிசோதனையில், அவரின் நுரையீரல் இரண்டிலும் நிமோனியா தொற்று ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கு அவருக்கு மேலதிக மருத்துவ சிகிச்சை அவசியமாகியுள்ளது.

இருந்த போதிலும், போப்பாண்டவர் நல்ல மனநிலையில் இருந்தார் எனவும் வாசித்தல், ஓய்வெடுத்தல் மற்றும் பிரார்த்தனை செய்வதில் அவர் நாளைக் கழித்துள்ளார் என்றும் வத்திக்கான் கூறியது.

மேலும், பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் நலம் விரும்பிகளுக்கு தனது நன்றியைத் தெரிவித்து, அவருக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டாகவும் வத்திக்கான் குறிப்பிட்டது.

கடந்த வாரம் வைத்தியசாலையில் அனுமதிக்கும் முன், போப் பல நாள்களுக்கு முச்சுக்குழாய் ஒவ்வாமை அறிகுறிகளைக் கொண்டிருந்தார்.



அவர், 2025 கத்தோலிக்க புனித ஆண்டிற்கான வார இறுதியில் பல நிகழ்வுகளை வழிநடத்தவிருந்தார், இது அடுத்த ஜனவரி வரை திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், போப்பின் நாள்காட்டியில் உள்ள அனைத்து பொது நிகழ்வுகளும் ஞாயிற்றுக்கிழமை வரை இரத்து செய்யப்பட்டுள்ளன.

ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக இருந்த போப் 12 ஆண்டுகளில் பலமுறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் 21 வயதில் அவரது நுரையீரல்களில் ஒரு பகுதி அகற்றல் உட்பட வாழ்நாள் முழுவதும் பல உடல்நலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளார்.

2023 மார்ச்சில் அவர் மூச்சுக்குழாய் ஒவ்வாமையுடன் மருத்துவமனையில் மூன்று இரவுகளைக் கழித்தார்.

அதே ஆண்டு ஜூன் மாதம் வயிற்று குடலிறக்கத்தை சரிசெய்ய மூன்று மணிநேர அறுவை சிகிச்சை மேற்கொண்டார்.

மற்றொரு நோயின் காரணமாக, 2023 இல் COP 28 காலநிலை உச்சிமாநாட்டிற்காக ஐக்கிய அரபு எமிரேட்ஸிற்கான தனது பயணத்தை இரத்து செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

கடந்த ஆண்டு டிசம்பரில், அவர் செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவில் 21 புதிய கத்தோலிக்க கர்தினால்களை நிறுவும் விழாவிற்கு தலைமை தாங்கியபோது, அவரது கன்னத்தில் ஒரு பெரிய காயத்துடன் தோன்றினார்.

மிக அண்மைய சம்பவமாக ஜனவரியில் அவர் கீழே விழுந்து வலது கையில் காயம் ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# வாகனங்கள், மருந்துப் பொருள்கள் மீது 25 வீத வரி விதித்தார் டொனால்ட் ட்ரம்ப்

இறக்குமதி செய்யப்பட்ட வாகனக் கட்டணங்கள், குறைக்கடத்திகள் (semiconductors) மற்றும் மருந்துப் பொருள்கள் மீது சுமார் 25 சதவீத வரிகளை விதிக்க திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

சர்வதேச வர்த்தகத்தை உயர்த்த அச்சுறுத்தும் ட்ரம்பின் அண்மைய கட்டண எச்சரிக்கை இதுவாகும்.

புளோரிடாவில் உள்ள தனது மார்-ஏ-லாகோ தோட்டத்தில் செய்தியாளர் சந்திப்பின் போது ட்ரம்ப் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இது குறித்த அறிவிப்பு ஏப்ரல் 2 ஆம் திகதி விரைவில் வெளியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய கடமைகள், செயல்படுத்தப்பட்டால், ஜனாதிபதியின் வர்த்தகப் போரை விரிவுபடுத்தும்.

ட்ரம்ப் முன்னர் மார்ச் மாதத்தில் நடைமுறைக்கு வரும் எஃகு மற்றும் அலுமினியம் மீதான 25 வீத கட்டணங்களை அறிவித்தார்.

எனினும், நேற்று வெளியிட்ட புதிய அறிவிப்பு, ஏனைய பிற துறைகளையும் பாதிப்பதாக அமைந்துள்ளது.



உலகெங்கிலும் உள்ள அமெரிக்க வர்த்தக உறவுகளை மறுசீரமைக்கும் முயற்சியின் ஒரு பகுதியான ட்ரம்ப் கட்டணங்களை உயர்த்தியுள்ளார்.

ஏனைய நாடுகள் அமெரிக்காவை கிழித்தெறிவதாக அவர் நீண்ட காலமாக குற்றம் சாட்டினார்.

மேலும் அமெரிக்காவிற்கு தொழில்களை மீண்டும் கொண்டு வருவதற்கும் அதிக வருவாயை சேகரிப்பதற்கும் இறக்குமதி வரிகளை ஒரு வழியாக ட்ரம்ப் கருதுகிறார்.

கனடா முரசு
புதன்கிழமை 19/02/2025

## விமான நிலையத்தில் போக்கவரத்து பாதிப்பு

றொறன்ரோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்தில் தொடர்ந்து தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் 02





# கனடாவின் டொறன்ரோவில் பனிப்பொழிவு நீடிக்கும்

### பயண எச்சரிக்கை விடுப்பு

**டொரன்ரோவில் கடும் பனிப்பொழிவு ஏற்படும் என பயண எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.**

**எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இவ் வாறு கடும் பனிப்பொழிவு நிலைமை நீடிக் கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.**

**கனடிய சுற்றாடல் திணைக்களத்தினால் இது தொடர்பில் பயண அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.**

**கடந்த வாரத்தில் அடுத்தடுத்து இரண்டு பனிப்புயல் தாக்கங்கள் பதிவாகி இருந் தமை குறிப்பிடத்தக்கது.**

டொரன்டோ பெரும்பாக பகுதியின் அதிவேக நெடுஞ்சாலைகளில் 100 இற்கும் மேற்பட்ட வாகன விபத்துக்கள் இந்த வார இறுதியில் பதிவாகி இருந்தன என தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று 4 முதல் 8 சென்றி மீற்றர் வரையில் பனிப்பொழிவு ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டிருந்தது

பனிப்பொழிவினை அகற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# கனடாவில் இளவரசர் ஹரி

பிரித்தானிய இளவரசர் ஹரி, கனடாவில், கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோவுடன் காணப்படும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

விடயம் என்னவென்றால், இளவரசர் ஹரி 2014ஆம் ஆண்டு, போரில் காயமடைந்த மற்றும் உறுப்புகளை இழந்த இராணுவ வீரர்களுக்காக இன்விக்டஸ் விளையாட்டுகள் என்னும் விளையாட்டுப் போட்டிகளைத் துவக்கினார்.

ஆண்டுதோறும் அந்த விளையாட்டுப் போட்டிகள் வெவ்வேறு நாடுகளில் நடைபெற்றுவருகின்றன.

இம்முறை, அதாவது, 2025ஆம் ஆண்டுக்கான இன்விக்டஸ் விளையாட்டுப்போட்டிகள், கனடாவில் நடைபெற்றுள்ளன.

அந்த போட்டிகளுக்காகத்தான் இளவரசர் ஹரி கனடா சென்றுள்ளார்.

இன்விக்டஸ் போட்டிகளின் இறுதி நிகழ்ச்சிகளில் கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோவும் கலந்துகொண்டுள்ளார்.

ஹரியும் ட்ரூடோவும் மகிழ்ச்சியுடன் அளவளாவிக் கொண்டிருக்கும் காட்சிகள் தற்போது வெளியாகியுள்ளன.

அடுத்த ஆண்டுக்கான, அதாவது, 2026ஆம் ஆண்டுக்கான இன்விக்டஸ் போட்டிகள் பிரித்தானியாவில் நடைபெற உள்ளதால், அவை பெரும் எதிர்பார்ப்புகளை உருவாக்கியுள்ளது.







# கனடாவில் ஏற்பட்ட தீ விபத்தில் 12 பேர் காயம்

கனடாவின் டொரொண்டோவில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 12 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அடுக்கு மாடிக்குடியிருப்பின் 6 ஆவது மாடியில் இத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாகவும், இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புப் படைவீரர்கள் மற்றும் பொலிஸார் அடுக்குமாடிக் குடியிருப் பில் இருந்தவர்களை மீட்டுள்ளதுடன் தீப்பரவலையும் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இத்தீவிபத்தில் 12 பேர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், அவர்களில் ஒருவரது நிலை கவலைக்கிடமாக உள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



## விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற விபத்தில் 18 பேர் காயமடைந்ததை தொடர்ந்து விமானப் பயணங்களில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த விமானம் சென் போல் நகரிலிருந்து பயணித்த நியைலில் விபத்துக்குள்ளாகியுள்ளது. விமானத்தில் 80 பயணிகள் இருந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்துக்குப் பிறகு விமான நிலையத்தில் போக்குவரத்து பல மணி நேரத்திற்கு நிறுத்தப்பட்டது.

நேற்று காலலையிலும் பியர்சன் விமான நிலையத்தின் இரண்டு ஓடுபாதைகள் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் இன்னும் எதுவும் கூறவில்லை, ஆனால் விசாரணை நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் சில நாள்களுக்குல் மேலும் விமான தாமதங்களும் விமானப் பயணங்களும் ரத்தாகும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்த விபத்து காரணமாக முதல்வர் டக் போர்ட்டின் பிரச்சாரப் பணிகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், பிரச்சாரப் பணிக்காக விமானத்தில் பயணிக்கவிருந்த போதிலும் அந்த விமானப் பயணம் ரத்து செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.






# டொறன்ரோ பனியை அகற்ற 3 வாரங்கள் தேவைப்படும்

டொறன்ரோவில் பனிப்பொழிவினை அகற்றுவதற்கு 3 வாரங்கள் தேவைப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

ஒரே வாரத்தில் மூன்று தடவைகள் பாரியளவில் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வீதிகளில் படர்ந்துள்ள பனியை அகற்றுவது மிகவும் சவால் மிக்கது என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை 10 சென்றி மீற்றரும், கடந்த புதன்கிழமை 20 சென்றி மீற்றரும் இன்று 25 சென்றி மீற்றரும் பனிப்பொழிவு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிகளவு பனிப்பொழிவு காரணமாக சில பகுதிகளில் வாகனங்களை நிறுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பனிப்பொழிவினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.








# கனடாவில் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவில் ஸ்னோவ் மொபைல் அல்லது பனி உந்தி விபத்தில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

55 வயதான நபரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. டர்ஹம் பகுதியில் புரொக் என்னும் இடத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மற்றுமொரு பனி உந்தி மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பின்னால் சென்ற பனி உந்தி மோதியதில் குறித்த நபர் வீசி எறியப்பட்டதாகவும் அதனால் பலத்த காயங்களுக்கு உள்ளாகியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து இடம்பெற்ற பகுதிக்கு விரைந்த உயிர்காப்பு பணியாளர்கள் அவசர முதலுதவிகளை செய்த போதிலும் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் தெரிந்தால் அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.